நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை, பொதுப் பணித்துறை போன்ற பல்வேறு துறைகளில் உள்ள Overseer, Junior drafting Officer, Technical Assistant பதவி களின் தற்போதைய ஊதிய விகிதமான ரூ. 1200—2040-ஐ ரூ. 1350—2200 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மேற்கூறிய ஊதிய உயர்வுகளினாலும், இதர சில ஊதிய விகித மாற்றங்களினாலும் அரசின் அமைச்சுப் பணியாளர்களுக்கான புதிய பதவி உயர்வு திட்டங்களினாலும் 28,300 அரசு அலுவலர்கள் பயன் அடைவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த ஊதிய விகிதங்களில் உள்ள மாற்றங்கள் 1—6—1988-லிருந்து, அதாவது ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்திய நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு பணப்பயன் (Monetary benefit) 1—4—1992 முதல் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

அரசு அலுவலர்களின் நலனைப் பேணிக் காக்கும் எங்கள் அரசு தற்போதைய கடுமையான நிதிநிலைமையிலும்கூட இந்த முடிவுகளை அமல் செய்வதால் ஏற்படும் கூடுதல் செலவினமான 11.06 கோடி ரூபாயை ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

4. கவன ஈர்ப்பு

(அ) ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டைப் பகுதியில் சரபுங்கா ஆற்றின் வெள்ளத்தினால் விளை நிலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. கிருஷ்ணன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. கிருஷ்ணன்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டைப் பகுதியில், சரபுங்கா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினால் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த'' அவசரப்

[திரு. சி. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 23

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டு இருக்கிறது:—

விவர அறிக்கை

1991 நவம்பர் திங்களில் பெய்த பெருமழையினால் செங்கல்பட்டு—எம்.ஜி. ஆர்., தென்னாற்காடு, தர்மபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள ஆறுகள் மற்றும் ஏரிகள் நிரம்பி அதனால் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. இதன் விளைவாக வேளாண்மை விளை நிலங்களில் மணல் மேடிட்டு விவசாயிகளுக்கு மகசூல் பாதிக்கப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறையைச் சார்ந்த செயற்பொறியாளர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சென்று ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் மணல்மேடிட்டு பாதிக்கப்பட்ட விளை நிலங்களின் மொத்த பரப்பளவு 944.75 ஹெக்டர் என்று தெரிவித்தனர். அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளன:—

வரிசை எண் மற்றும் மாவட்டத்தின் பெயர். (1)	மணல் மேடிட்டு பாதிக்கப் பட்ட விளை நிலங்களின் பரப்பு (எக்டேரில்) (2)
1. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் ..	242.82
2. தென்னாற்காடு மாவட்டம்	440.15
3. தர்மபுரி மாவட்டம்	7.39
4. தஞ்சாவூர் மற்றும் காயிதேமில்லத் மாவட்டம். ..	45.34
5. சேலம் மாவட்டம்	209.05
மொத்தம் ..	944.75

மேற்கூறிய மணல்மேடிட்ட விளை நிலங்களை புல் டோசர் மூலம் சமன் செய்திடவும், தர்மபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் உடைபட்ட 29 கசிவு நீர்க் குட்டைகளை பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் ரூ. 150 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்குமாறு தலைமை பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்கள் அரசைக் கோரி யுள்ளார். அவரது செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. சேலம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டதாக உள்ள குறிப் பிடப்பட்டுள்ள 209.05 ஹெக்டரில் ஓமலூர் வட்டம், கடையம்பட்டி ஒன்றியம் டேனிஷ்பேட்டை பகுதியில் சர புங்கா ஆற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்தின் காரண மாக 40 ஹெக்டேர் நிலம் மணல் மேடிட்டதும் அடங்கும்.

நவம்பர் 1991-ல் எதிர்பாராமல் பெறப்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக, நாகப்பட்டினம் - காயிதே மில்லத், தஞ்சாவூர், தென்னாற்காடு, செங்கல் பட்டு-எம்.ஜி.ஆர்., திருச்சிராப்பள்ளி மற்றும் வட ஆற்காடு- அம்பேத்கார் மாவட்டங்களில் வேளாண்மைப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. 0.96 இலட்சம் எக்டேர்களில் முழுவது மாகவும், 1.28 இலட்சம் எக்டேர்களில் ஓரளவும் பயிர்கள் பாதிக்கப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணமாக ரூ. 9.336 கோடிகள் செலவிட அரசால் ஒப்பளிக்கப்பட் பட்டுள்ளது.

மேற்கூறிய சூழ்நிலையில் ஓமலூர் வட்டத்தில் மண் மேடிட்டு பாதிக்கப்பட்டுள்ள விளை நிலங்களில் புல்டோசர் மூலம் சமன் செய்வதற்கு உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியே இல்லை என்று சொன்னாலும்கூட, நீதியுடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புல்டோசர் மூலம் சமன் செய்வதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வெள்ளத்தினால் ஏற்காடு மலையிலிருந்து பெரும் பாறைகள் வந்து இந்த கிணறுகளை மூடி நெற் பயிர், கரும்புத் தோட்டம் போன்ற பயிர்கள் எல்லாம் அழிந்துவிட்டன. அப்படி மூடப்பட்ட கிணறுகளை தோண்டுவதற்கு விவசாயிகள் அரசு கடன் வாங்க முடிய வில்லை. அவர்கள் ஏற்கெனவே தொடக்கக் கூட்டுறவு வங்கியிலே கடன் பெற்று இருப்பதாலே அவர்கள் அரசு கடன் பெற முடியாத நிலைமையில் இருக்கின்றார்கள்

அந்த கிணறுகளை தோண்டுவதற்கு அரசு கடன் உதவி செய்ய வேண்டும். அதேபோல, அப்போது பாதிக்கப் பட்ட நெற்பயிர்களுக்கும் கரும்புத் தோட்டத்திற்கும் அரசு ஏதாவது உதவி செய்ய திட்டம் வகுத்துள்ளதா என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 நவம்பர் மாதம் நடைபெற்ற வெள்ளத்திலே பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு உரம், விதை, பூச்சிமருந்துகள் ஆகியவை இலவச மாக அரசாங்கம் வழங்கியது. அப்படி வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலக்கட்டத்திலே விவசாயிகளினுடைய பயிரிடக்கூடிய விளைநிலங்கள் கற்களாலும் மணல்களாலும் மூடப்பட்டு மணல் மேடுகளாக காட்சி தருகின்ற காலத் திலே அவைகளை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறப்பு ஆணை கள் மூலமாக கடன் வழங்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் கொடுப்பதற்கு தேசிய உடமையாக் கப்பட்ட வங்கிகள் இருக்கின்றன கூட்டுறவு சேவை சங்கங்கள் இருக்கின்றன. ஆனால், அந்த விவசாயிகளுக்கு அந்த மணல் மேடுகளை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய பணிகளுக்கு ஆகிற செலவிலே அரசு ஒரு சில தொகையை மானியமாக வழங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பேராவூணித் தொகுதியில் ஆதி திராவிடர்களின் ஜீவன்தாரா திட்ட கிணறுகளுக்கு மூன்று ஆண்டுகளாக மோட்டார் வாங்க மானியம் வழங்காதது குறித்து.

மாபுண்மிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.